# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

**අංක 2448/38 - 2025 අගෝස්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.08.07**

**2448/38 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 143)**

2025 மே மாதம் 23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2437/53 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம், 2025/26 ஆம் ஆண்டில் பொருளாதார தொகைமதிப்பை நடத்துவதற்காக, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி தெமட்டகொடகே தோன கௌரி அனோஜா செனவிரத்ன அவர்கள் தொகைமதிப்பு அத்தியட்சகராக தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 143) பிரிவு 3 இன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஹர்ஷன சூர்யப்பெரும.
செயலாளர்,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
2025 யூலை 31.

**தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 143)**

2025 மே மாதம் 23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2437/53 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக, கௌரவ சனாதிபதி அவர்கள் தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 143) பிரிவு 4 இன் கீழ், 2025/26 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள பொருளாதாரத் தொகைமதிப்பை நடத்துவதற்காக, இங்குள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை பிரதித் தொகைமதிப்பு அத்தியட்சகர்களாகவும், இங்குள்ள அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை உதவித் தொகைமதிப்பு அத்தியட்சகர்களாகவும், நியமித்துள்ளார்.


1A - G45061- 14(2025/08)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அனைத்து மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள், அனைத்துப் பணிப்பாளர்கள் மற்றும் அனைத்துப் பிரதிப் பணிப்பாளர்கள்

**அட்டவணை II**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அனைத்து சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் அனைத்துப் புள்ளிவிபரவியலாளர்கள்

கலாநிதி ஹர்ஷன சூர்யப்பெரும.
செயலாளர்,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
2025, யூலை 31.

## தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 143)

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள், தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 143) பிரிவுகள் 6, 7 மற்றும் 9 இன் படி, கீழே உள்ள அட்டவணையின் நிரல் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அதிகாரியையும், அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக, பொருளாதாரத் தொகைமதிப்பில் விவசாய நடவடிக்கைகளைக் கணக்கெடுப்பதற்காக நிரல் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நிரல் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசத்திற்கு நியமித்துள்ளார்.

கலாநிதி ஹர்ஷன சூர்யப்பெரும.
செயலாளர்,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
2025, யூலை 31.

**அட்டவணை**

| | *நிரல் 1*<br>*நிரந்தர பதவி* | *நிரல் 2*<br>*தொகைமதிப்புப் பதவி* | *நிரல் 3*<br>*கடமை அதிகாரப் பிரதேசம்* |
|---|---|---|---|
| 1 | ஆணையாளர் நாயகம் - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 2 | பணிப்பாளர் நாயகம் - விவசாயத் திணைக்களம் | தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 3 | பணிப்பாளர் நாயகம் - இலங்கை மகாவலி அதிகாரசபை | தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலிப் பிரதேசம் |

| | *நிரல் 1*<br>*நிரந்தர பதவி* | *நிரல் 2*<br>*தொகைமதிப்புப் பதவி* | *நிரல் 3*<br>*கடமை அதிகாரப் பிரதேசம்* |
|---|---|---|---|
| 4 | மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் | தொகைமதிப்பு ஆணையாளர் | மாவட்டம் |
| 5 | மேலதிக மாவட்ட செயலாளர் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாவட்டம் |
| 6 | பிரதேச செயலாளர் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | பிரதேச செயலாளர் பிரிவு |
| 7 | மேலதிக ஆணையாளர் நாயகம் - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 8 | ஆணையாளர் (சேவை) - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 9 | ஆணையாளர் (அபிவிருத்தி ) - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 10 | ஆணையாளர் (மனிதவள அபிவிருத்தி) - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 11 | மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி ) - விவசாயத் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 12 | மேலதிக விவசாய பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி) - விவசாயத் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 13 | மாகாணப் பணிப்பாளர் - விவசாய திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாகாணம் |
| 14 | பணிப்பாளர் – தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம் (NAICC) - விவசாயத் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 15 | பணிப்பாளர் – சமூக பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் நிலையம் (SEPC) - விவசாயத் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | இலங்கை |
| 16 | பணிப்பாளர் – விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் (ETC) - விவசாயத் திணைக்களம் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாகாணங்களுக்கிடையில் |
| 17 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை மகாவலி அதிகாரசபை | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |
| 18 | பணிப்பாளர் (விவசாயம்)- இலங்கை மகாவலி அதிகாரசபை | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |
| 19 | பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை அபிவிருத்தி) - இலங்கை மகாவலி அதிகாரசபை | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |
| 20 | பணிப்பாளர் - (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) - இலங்கை மகாவலி அதிகாரசபை | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |

| | *நிரல் 1*<br>*நிரந்தர பதவி* | *நிரல் 2*<br>*தொகைமதிப்புப் பதவி* | *நிரல் 3*<br>*கடமை அதிகாரப் பிரதேசம்* |
|---|---|---|---|
| 21 | வதிவிடசெயற்றிட்ட முகாமையாளர் - இலங்கை மகாவலி அதிகாரசபை | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |
| 22 | உதவி மாவட்ட செயலாளர் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாவட்டம் |
| 23 | உதவி பிரதேச செயலாளர் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | பிரதேச செயலாளர் பிரிவு |
| 24 | பிரதி/உதவி ஆணையாளர் - கமநல அபிவிருத்தித் திணைக்களம் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாவட்டம் |
| 25 | பிரதி/உதவிப் பணிப்பாளர் விவசாயம் - மாகாணம் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாவட்டம் |
| 26 | பிரதி/உதவி பணிப்பாளர் விவசாயம் - மாகாணங்களுக்கிடையில் - விவசாயத் திணைக்களம் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | மாகாணங்களுக்கிடையில் |
| 27 | பிரதி வதிவிடச் செயற்றிட்ட முகாமையாளர் - இலங்கை மகாவலி அதிகாரசபை | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் | மகாவலி வலயம் |

தொகைமதிப்பின் கணக்கெடுப்புப் பணியின் போது மேற்கண்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஓய்வு பெறல்/இடமாற்றம்பெறல்/பதவி வெற்றிடமாதல் காரணமாக உடனடி உயர் அதிகாரியால் நியமிக்கப்படும் அதிகாரிகள் தொகைமதிப்பின் கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளக் கடப்பாடுடையவர்களாவர்.

அதேபோல், ஏற்கனவே வெற்றிடமாகவுள்ள ஒரு பதவிக்கு தொகைமதிப்பின் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட பதவிக்கு ஒரு நிரந்தர அதிகாரி நியமிக்கப்பட்டாலும் அதுவரை தொகைமதிப்பின் கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொண்ட அதிகாரி அந்தக் கடமைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

EOG 08-0062

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.